## மெட்ரோ ரயில் நிறுவன அலுவலகத்தில்

# வாய் சுகாதார தினத்தையொட்டி விழிப்புணர்வு முகாம்

■ சென்னை

மெட்ரோ ரயில் நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

வாய் சுகாதார தினத்தை முன்னிட்டு கோயம்பேட்டில் உள்ள நிர்வாக அலுவலகத்தில் மெட்ரோ ரயில் நிறுவனம் மற்றும் மீனாட்சி அம்மாள் பல் மருத்துவக் கல்லூரியும் இணைந்து வாய் சுகாதார விழிப்புணர்வு முகாம் நேற்று நடத்தப்பட்டது. 25-க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் குழுவினர், மெட்ரோ ரயில் ஊழியர்கள் 250-க்கும் மேற்பட்டோரின் பல் மற்றும் வாய் குறித்து பரிசோதனை நடத்தினர்.

இதுபோல், மெட்ரோ ரயில்களில் பயணிகளுக்கு வாய் சுகாதாரம் குறித்து விழிப்புணர்வு கையேடுகள், துண்டு பிரசுரங்கள் விநியோகம் செய்யப்பட்டன. மேலும், பற்களை சுத்தமாக வைத்துக் கொள்வது, தொடர்ந்து பராமரிப்பது குறித்து விளக்கம் அளிக்கப்பட்டன.